RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2224s-22286

OPEN ACCESS

# வளையாபதியில் அறம்

**வி. செல்வி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வாவு வஜிஹாவனிதையா கல்லூரி, காயல்பட்டணம், தமிழ்நாடு, இந்தியா.

# Virtue in Valayapathi

**V. Selvi** [a, *]

[a] Department of Tamil, Wavoo Wajeeha Women's College, Kayalpatnam, Tiruchendur, Tamil Nadu, India

* Corresponding Author: selviwwwctamil@gmail.com

Received: 03-09-2022
Revised: 03-11-2022
Accepted: 11-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

The mind which is considered to be as magic demon changes itself according to the situation. We need God's grace to subdue such a mind. A pure mind is required to receive the grace of God. To attain a pure mind one must do good deeds. Human life is full of pleasures and sorrows. Human life is a mix of joy and sorrow. It is human nature to laugh in joy and cry in sorrow. Only God can remove the miseries of birth. Pleasure and pain are impermanent. Human life is a transition between these two states. Believing that this world will stand still in the changing human life. The stupidity of man. The human mind refuses to recognize that attachment in this world is of no use, instead pride and power flourish. Thus man tries to do evil deeds. He suffers for his own sake. The human mind has not matured in the mindset of accepting suffering for a person who has plowed in pleasure. On the other hand, only after experiencing it, he learns that only evil can be caused by suffering. Therefore, after such suffering, the thought arises in him that he should do good deeds only later. As a result of that thought, people believed that good deeds can be done only by seeking God. The purpose of this article is to explain that the man who has done good deeds wants to do good deeds for himself and others and thus reaches God by reading and listening to good books and doing good deeds.

**Keywords:** Human Mind, Good And Evil Deeds, Pleasure, Suffer, Emphasizes

## முன்னுரை

மனம் என்னும் மாயப்பிசாசு சூழ்நிலைக் கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ளுகிறது. அத்தகைய மனத்தை அடக்குவதற்கு இறைவனின் அருள் வேண்டும். இறைவனின் அருளைப் பெறுவதற்கு தூய்மையான மனம்வேண்டும். தூய்மையான மனத்தைப் பெறுவதற்க்கு நல்லசெயல்களைச் செய்யவேண்டும் மனிதவாழ்வு என்பது இன்பமும், துன்பமும்கலந்தது. இவ்வுலகில் நாம் பிற உயிர்களுக்குச் செய்யும் நன்மையே மறுமைக்கு வழிவகுப்பதற்க்கு அமைகிறது. மனித வாழ்வு என்பது, இன்பமும் துன்பமும் கலந்தது. இன்பத்தில் சிரிப்பதும், துன்பத்தில் அழுவதும், மனித இயல்பு. பிறவித் துன்பத்தை நீக்குவதற்கு, இறைவனால் மட்டுமே முடியும். இன்பமும் துன்பமும் நிலையானதன்று. இவ்விரு நிலையும் மாறி, மாறி அமைவதுதான் மனித வாழ்க்கை. மாறி வரும் மனித வாழ்க்கையில், இவ்வுலகம் நிலைபெற்று நிற்கும் என நம்புவது. மனிதனின் மூடத்தனம். இவ்வுலகத்தில் உள்ள பற்றினால் ஏதொரு பயனும் இல்லை என்பதை மனித மனம் அறிந்து கொள்வதற்கு மறுக்கிறது மாறாக ஆணவமும் அதிகாரமே தழைத்தோங்குகிறது. இதனால் மனிதன் தீய செயல்களைச் செய்ய முயன்று. அதினிமித்தம் துன்பத்தை அனுபவிக்கிறான். இன்பத்தில் உழன்ற

மனிதனுக்கு, துன்பத்தை ஏற்றுக்கொள்கின்ற மனநிலையில் மனித மனம் பக்குவப்பட வில்லை. மாறாக துன்பத்தால் தீமையே நேரிடும் என்பதை, தான் அனுபவப்பட்ட பின்பே, அறிந்து கொள்கிறான். எனவே அத்தகைய துன்பத்தில் உழன்ற, பின்னரே நற்செயல்கள் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவனுள் எழுகிறது. அந்த எண்ணத்தின் விளைவாக, இறைவனை நாடினால் மட்டுமே, நற்செயல்களை செய்ய முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. நற்செயல்களை செய்த மனிதன் தனக்கும் பிறருக்கும் நற்செயல்களை செய்ய வேண்டுமென்று நினைக்கிறான் அதன்மூலம் நல்ல நூல்களைப் படித்தும் கேட்டும் நற்செயல்களை செய்தும் இறைவனை அடைகிறான் என்பதை வளையாபதியின் மூலம் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இறைவனை அடைவதற்குரிய வழிகள்

இறைவன் தூணிலும் இருக்கிறான் துரும்பிலும் இருக்கிறான் என்று கூறுகிறோம். ஆனால் நாம் இறைவனைநரிடையாகக் காண்பதுஎன்பது இயலாதஒன்று. "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்றும், "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்றும், வேதங்கள் கூறுகின்றன. இறைவன் என்பவன் மனிதமனத்தில் தான் உறைகிறான் என்றும், அத்தகைய இறைவன் வாழுமிடத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் நற்செயல்களைச் செய்தால் தான் மறுமைஅடையமுடியும் என்பதையும், இறைக்கொள்கைகள் நமக்குத் தெளிவாகப் போதிக்கின்றன. இதேகருத்தைப் புறநானூற்றுப் பாடலும் பதிவுசெய்கிறது (Avvai Duraisamy Pillai, 1947).

"நல்லதுசெய்தல் ஆற்றீராயினும்

ஆல்லதுசெய்தல் ஓம்புமினதுதான்"

இந்த உலகத்தில் வாழும் போது நன்மை செய்ய இயலாதாயினும் தீமை செய்தலையாவது கைவிட்டு விடுங்கள் அதுதான் உங்களை நற்கதிக்கு வழிவகுக்கும் என்று இயம்புகிறது. இம்மையில் நாம் செய்யும் நன்மையே மறுமையைத் தீர்மானிக்கும். எனவே இவ்வுலகத்தில் வாழும்போது அறம் செய்ய வேண்டிய செயல்களைப் பட்டியலிடுகிறது வளையாபதிகாப்பியம்.

## மனிதவாழ்வு

மனிதவாழ்க்கையானது இன்பமும் துன்பமும் கலந்தது. இரண்டும் மாறிமாறிநம்மைத் தாக்கக்கூடியது. நாம் இன்பத்தை மட்டுமே அனுபவிக்கப் பிறந்தோம் என்றுதவறாகக் கருதினால், பக்கத்தில் இருக்கும் துன்பம் நம்மைப் பர்த்துச் சிரிக்கும். இன்பத்தின் அருகில் அதன் நிழல் போல, அச்சத்தைத் தரக்கூடிய துன்பமும் பக்கத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்பிறவித் துன்பம் நீங்குவதற்கு, ஆற்றல் மிக்கவனாக விளங்கும் அருகக் கடவுளை வணங்குங்கள் உங்களுக்குப் பிறவித் துன்பம் நீங்கும் என்றகருத்தை வலியுறுத்துகிறது இப்பாடல்,

"பருவந்துசாலப் பலாகொல்என்றுஎண்ணி

ஒருவாதம் உள்ளத்துஉவத்தல் ஒழிமின்

வெருவந்ததுன்பம் விருக்கும் திறலோன்

ஒருவன் உலகிற்குஉளன்என்னும் ஆறே" (Ramabalasubramaniyan, 2000)

மனித வாழ்வு என்பது இன்பமும் துன்பமும் கலந்தது. இவ்விரு நிலையும், நிலையானதன்று. மாறிவரும் தன்மை கொண்டது. சிறிது காலம் நிலைத் திருக்கக் கூடியது யாருக்கும் எந்தப் பிறவிலும் மகிழ்ச்சியைத் தராது.

"வினையை வலியினாலே வேறுவேறு யாக்கை

நுனிபலபிற விதன்னுள் துன்புறாஉம் நல்லுயிர்க்கு

மனிதன் அரியதாகும் தோன்றுதல் தோன்றினாலும்" (Ramabalasubramaniyan, 2000)

அறம் செய்தால் இப்பிறவி மட்டுமல்ல மறுமையிலும் நம்மை நற்கதி சர்க்கும் என்று எடுத்துரைக்கிறது இப்பாடல்.

"இனியவைநுகர எய்தும் செல்வமும் அன்ன தேயாம்"

மனிதப் பிறவிமட்டுமே, மேலாக அனைத்தையும் அறியக்கூடியது. ஆதை அறிந்து கொண்டால் செல்வத்தைத் தேடுவதும். அதை அனுபவிப்பதும் ஒரு அற்பமான செயலே என்று அறிந்து கொள்ள இயலும், என்றகருத்தைக் கூறுகிறது இப்பாடல் (Ramabalasubramaniyan, 2000).

மனித வாழ்வு என்பது நிலையற்றது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு கருதக்கூடாது. அவ்வேறுபாடு கருதுவதனால் எந்த ஒரு நன்மையும் கிடைப்பதில்லை. ஒன்றும் இல்லாத பிச்சைக்காரனின் நிலையும் ஒன்று போல மரணப் புள்ளியில் தான் முடிகிறது. மனித இறப்பிற்குப் பின் பணம், பதவி எல்லாம் பறிபோய்விடும். ஆனால் அறம், நன்னெறி ஆகியவைதாம், இறப்பிற்குப் பிறகு உள்ளத் நிலையைத் தீர்மானிக்கும். ஆகவே நல்ல வழியில் வாழத் தொடங்கினால் முக்தியை அடையலாம். முக்திநிலையே நிரந்தரமானது. இவ்வுலக இன்பம் என்பது தற்காலிகமானது தான் என்பதைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

"வித்தகர் செய்த விளங்குமுடி கவித்தார்

மத்தக மாண்பழிதல் காண்வழி நெஞ்சே.

மத்தக மாண்பழிதல் கண்டால் மயங்காதே

உத்தம நன்னெறிக்க ணில்வாழி நெஞ்சே.

உத்தம நன்னெறிக்க ணின்றூக்கஞ் செய்தியேல்

சித்தி படர்தல் தௌ¤வாழி நெஞ்சே" (Ramabalasubramaniyan, 2000).

## ஆசை

ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசையை ஒழித்தால் இவ்வுலக வாழ்விலிருந்து விடுபடலாம் என்றபுத்தான் அறிவுறைப்படி, ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. இவ்வுலகில் பிறந்தமனிதா ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றின் மீது ஆசை வைத்து அதை அடைய முயற்சிக்கிறான். ஆசை காரணமாகத் தான் மண்ணில் மனிதப்பிறப்பே நிகழ்கிறது. ஒருவனுக்கு ஆசையே அனைத்துத் துன்பத்திற்கும் மூலவிதையாகும். அதுவேபாவத்தைச் செய்யத் தூண்டுகிறது. தீவினையைமேலும் மேலும் வளாக்கிறதுஎன்பதைவிவரிக்கிறது இப்பாடல் வரிகள்.

"உற்றஉதிரம் ஒழிப்பான் கலிங்கத்தை

மற்றது தோய்த்துக் கழுவுதல் என்ஒக்கும்

பற்றினால் ஆகியபாவத்தை மீட்டும்

பற்றொடு நின்று பிறைக்குஉறும் ஆறே" (Ramabalasubramaniyan, 2000)

இந்த உடம்பின் தேவை காரணமாகவே உலகப் பொருள்களின் மீது நமக்கு ஆசை உண்டாகிறது. எனவே பிறவியை நீக்கி உடற்சுமையை ஏற்பதை விட்டுவிட்டு முக்தி அடையும் எண்ணத்தைக் கைக்கொள்ளவேண்டும் எனஎடுத்துரைக்கிறது.

"மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்

உற்றார்க்கு உடம்பும் மிகை"

கல்வி செல்வம், வீரம் என்று கூறும் செல்வங்களுள்ளும் பொருட்செல்வமே மனிதனைப் போரிடருக்குத் தள்ளுகிறது. வுழ்க்கைக்குப் பொருட்செல்வமே முக்கியமானது. பொருட்செல்வம் இல்லையென்றால் இந்த உலகில் வாழ்ந்தும் பயனில்லை. அதேபோல் பொருட்செல்வத்தை தேவைக்கு

அதிகமாக வைத்திருந்தாலும் அதனாலும் பயன்ஒன்றுமில்லை. பொருட்செல்வம் உள்ளபோதும், இல்லாதபோதும் கவலையில்லாமல் இருப்பதேநல்லதுஎன்கிறதுவளையாபதி.

"இல்லெனின் வாழ்க்கையும் இல்லைஉண்டாய்விடின்

சோல்வார் கயவார் கொளப்படும் வீடுவா

ஆல்லைஉண் டாய்விடின் இம்மைமறுமைக்குப்

புல்லென்றுகாட்டும் புணர்வதும் அன்றே" (Ramabalasubramaniyan, 2000)

பொருட்செல்வம் உடையவார்கள் அறச் செயல்களில், ஈடுபடவேண்டும். தன்னிடம் உள்ளபொருட்களை, ஏழை எளியவாரகளுக்குக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் மறுமைக்கானவழியைத் தேடுவதற்கு உயார்ந்த வழியாக அமையும் என்பதை விளக்குகிறது.

ஒழிந்த பிறஅறன் உண்டு என்பார் உட்க

அழிந்து பிறர்அவாம் வம்பப் பொருளை

இழந்து சிறிதானும் எய்தாது ஒழிந்தார்

அழிந்து பெருந்துயர் நோய்க்கு அல்லாப் பவரே" (Ramabalasubramaniyan, 2000)

## உயிர்ப்பலியிடுதல்

உயிர்க் கொலை புரிவது பாவம் என்றும், அப்பாவத்தின் மூலம், நரகமே கிடைக்கும் என்றும் கூறுகிறது இப்பாடல்.

"தகாதுஉயிர் கொல்வானின்

மிகாமை இலைபாவம்

பிறா ஊன் கொன்று" (Ramabalasubramaniyan, 2000)

வேள்விகளில் உயிர்ப்பலி கொடுப்பதால், நன்மை உண்டு என கூறினாலும், அதனை ஏற்றுக் கொண்டு உயிர்ப்பலி கொடுப்பதை ஒரு போதும் செய்யாதீர்கள் எனவிவரிக்கிறது.

"கள்ளன் மின் களவுஆயினயாவையும்

கொள்ளன் மின் கொலை கூடிவரும் அறம்"

பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பதற்கு, கடலில் நீந்திக்கடப்பது மேல் என்றும், உயிர்க்கொலை புரிபவர்கள் இந்தப் பிறவிப் பெருங்கடலைக் கடப்பது என்பது இயலாத காரியம் எனவும் விளக்குகிறது.

"பிறவிக் கடலகத்து ஆராய்ந்து உணரின்

தெறுவதில் குற்றம் இலார்களும் இல்லை

அறவகை ஒரா விடக்கு மிசைவோர்

குறைவின்றித் தம்சுற்றம் தின்றன ராவர்." (Ramabalasubramaniyan, 2000)

சமணக் கொள்கையான கொல்லாமை பற்றிய செய்திகளைத் தருகிறது இப்பாடல்.

## ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது மனித வாழ்க்கையில் முதலாவது கடை பிடிக்க வேண்டிய ஒன்று. ஒழுக்கத்தை உயிரைவிட மேலானதாகக்கருத வேண்டும் என்கிறது திருக்குறள். ஒழுக்கமே ஒரு மனிதனை ஆராய்வதற்கு உதவுகிறது. ஒழுக்கத்தின் அடிப்படையில் மனிதனின் தரம் பிக்கப்பட்டு

நியாயந்தீர்க்கிறது. கல்வி கேள்விகளில் சிறந்தவராக இருந்தாலும், வேதங்களை நன்கு கற்றவராக இருந்தாலும் அறிவுகிடைக்காது. நாம் கற்றகல்வி, வேத அறிவைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்பவர்களே மிகச் சிறந்த மக்கள் என்றும் தெளிவுபடுத்துகிறது இப்பாடல்

"உத்தமநன்னெறிக்கண் நின்றுஊக்கம் செய்தியேல்

சுpத்திபிரிதல் தெளிவாழிநெஞ்சே" (Ramabalasubramaniyan, 2000)

தவம்செய்யும் முனிவர்கள் கூட ஒழுக்கத்தையே விரும்புவார்கள். எனவே இறைவனை அடைய ஒழுக்கநிலையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுகிறது.

## முடிவுரை

மனித வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்து வருவது. இன்பத்துக்கு மட்டுமே ஏங்குவதும் துன்பத்தைத் தூர ஒதுக்குவதும், மனித இயல்பு. அத்துன்பத்தின் வழியாகவே மனிதன் இறைவனை நாடுகிறான். இறைவனை நாடுவதன் மூலமே வாழ்க்கை சீராக அமையும் என்பதை உணர்ந்து தீயசெயல்களை விட்டுவிட்டு, நன்மை செய்து, தானதருமங்களையும், ஒழுக்கங்களையும், நல்ல பண்புகளையும் பெற்று, இறைவனுக்கு முன்பாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறான். மனமானது இறைநிலைக்கு நேராகச் செல்லும் போது பாவங்கள் செய்வதை விட்டுவிட்டு தான தருமம் போன்ற புண்ணிய காரியத்தைச் செய்தாலும், இறைவனுடைய அருள் மட்டுமே நம்மை நற்கதிக்கு வழிவகுக்கும் என்றும், இவ்வுலகில் வாழும்போது நற்பயன் செய்தும், நல்ல பண்புகளைக் கடைப்பிடித்தால் மட்டுமே நம் மைமறுமைக்கு அழைத்துச் செல்லும் எனக் கூறுகிறது வளையாபதி. எனவே இறைவனோடு ஒன்றுவதற்கு இறைவனுக்குஏற்ற கொள்கைகளைக் கடைப்பிடித்தால், மட்டுமே நாம் இறைவனை அடையலாம் என்றும், மறுமை உலகை அடைவதற்கு இவ்வுலலகில் நாம் சிறந்த அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்ற மறுமைச் செய்தியும் இக்கட்டுரையிலிருந்து பெறப்படுகிறது.

## References

Avvai Duraisamy Pillai, Su., (1947) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Ramabalasubramaniyan, (2000) Valaiyapathi Kundalakesi, Mullai Nilayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License